**IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE/ PRESIDING OFFICER SPECIAL COURT FOR E.C. AND NDPS ACT CASES, PUDUKKOTTAI.**

Present:Thiru. T. Panneerselvam, MBA.,M.L.,
Additional District and Sessions Judge/Presiding Officer, Pudukkottai.

**Thiruvalluvar Aandu 2057 Parapava Varudam Vaikasi Thingal 15th day**

**Friday the 29th day of May' 2026**

**Calender Case No.205/2024**
**CNR No.TNPD01-007593-2024**

| | | |
|---|---|---|
| 1. | Serial Number | - |
| 2. | Name of the Police Station and the crime number of the offence | NIB CID Ramnad P.S. in Cr.No. 08/2023 u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 |
| | **Description of the accused** | |
| 3. | Name | Ponnandi (Splitup in C.C. 136/2026)<br>2) Muthuramalingam |
| 4. | Father's Name /Husband Name | Ramaiya |
| 5. | Occupation | Coolie |
| 6. | Residence | 4/5, Manthoppu, Rameswaram. |
| 7. | Age | 57 |
| | **Date of** | |
| 8. | Occurrence | 30.08.2023 |
| 9. | Complaint | 30.08.2023 |
| 10. | Apprehension | 30.08.2023 |
| 11. | Release on bail | 27.09.2023 |
| 12. | Commitment | - |
| 13. | Commencement of Trial | 19.12.2025 |
| 14. | closure of trial | 25.05.2026 |
| 15. | Sentence or order | 29.05.2026 |
| 16. | Service of copy of Judgment or | 29.05.2026 |

| | | |
|---|---|---|
| | finding on accused. | |
| 17. | Explanation of delay | -- |
| 18. | Miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts, except routine petitions like petitions under section 317of the Code: | --- |
| 19. | Examination in Chief and cross-examination of a witness: | **Chief** **Cross**<br>1) 19.12.2025 - 19.12.2025<br>2) 19.12.2025 - 19.12.2025<br>3) 10.02.2026 - 10.02.2026 |
| | Examination of the Accused u/s 313 of the Code. | 25.05.2026 |
| 21. | Abscondence of an accused an his appearance/production: | --- |
| 22. | Victim Compensation Order: | ----- |
| 23. | The Period of remand of the Accused | 30.08.2023 - 27.09.2023 |
| 24. | Grant of stay by superior Courts and the results thereof; and | -- |
| 25. | Date of filing of the complaint/Final report in the Court | 11.11.2024 |

இவ்வழக்கு 25.05.2026 –ம் தேதியன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவருக்காக அரசு தரப்பு சிறப்பு பொது வழக்கறிஞர் திரு. எம். பாலசுப்ரமணியன், M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி. மணிகண்டன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,

**<u>தீர்ப்புரை</u>**

30.08.2023–ம் தேதி 05.15 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் இராமேஸ்வரம் to தனுஷ்கோடி ரோடு ஒத்தப்பட்டி கடற்கரையில் பிரித்தெடுக்கப்பட்ட எதிரி பொன்னான்டி குடிசை அருகில் அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருளான 1.800 கிகி கஞ்சாவை சட்ட விரோதமாக வைத்திருந்த குற்றத்திற்காக அதன் மூலம் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன்கீழ் NIB CID Ramnad காவல் ஆய்வாளரால் இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரி இந்த நீதிமன்றத்தில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல் அனைத்தும், எதிரிக்கு இலவசமாக குவிமுச பிரிவு 207–ன் கீழ் வழங்கப்பட்டன.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்தும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டும், இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டும், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 – ஆம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01–ன் படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ எதிரி குற்றச்சாட்டை மறுத்து வழக்கில் விசாரணை கோரியுள்ளார்.

4. இவ்வழக்கில் அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அதசாஆ.1 முதல் அதசாஆ.15 வரையிலான சான்றாவணங்களும் சான்றுப்பொருள் 1 முதல் 3 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**<u>5. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து அறியவரும் அரசு தரப்பு வழக்கின் சாராம்சம் பின்வருமாறு–</u>**

(I) அசா1 திரு.பெரியகருப்பன் தனது சாட்சியத்தில் கடந்த 29.08.2023–ம் தேதி காவல் பணியில் இருந்தபோது 21.30 மணிக்கு ஆய்வாளருக்கு ரகசிய தகவலாளி கொடுத்த தகவலை ராமநாதபுரம் போதைபொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் எழில்சுரேஷ்சிங் மேற்படி தகவலை காவல் துணை கண்காணிப்பாளருக்கும் தகவல் தெரிவித்துவிட்டு 30.08.2023–ம் தேதி 03.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து ரைடுக்கு ஆய்வாளருடன் தானும், குமாரும் புறப்பட்டு ராமேஸ்வரம் to தனுஷ்கோடி ஒத்தப்பட்டி கடற்கரையில் பொன்னாண்டி குடிசை அருகில் 5.00 மணிக்கு போதைப்பொருள் சம்மந்தமாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது சரியாக 05.15 மணிக்கு ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்படி வந்த முத்துராமலிங்கம் மற்றும் பொன்னாண்டி என்று முகவரி சொன்னார் என்றும், பின்பு NIB CID Police என தங்களின் அடையாள அட்டையை காண்பித்து விட்டு தங்களை அறிமுகம் செய்துவிட்டு எதிரிகள் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா எனும் போதைப் பொருளை வைத்திருப்பதாக தகவல் உள்ளது என்றும், ஆகவே எதிரிகளை சோதனை செய்ய நீதிமன்ற நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற பொது அதிகாரி முன்னிலையில் சோதனை செய்யலாம் என அவருக்கு உள்ள உரிமையை எடுத்துக் கூறினோம் என்றும் அதற்கு அவர் வேண்டாம் தாங்களே தன்னை சோதனை செய்யலாம் என்று கூறினார் என்றும், அதன்படி அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் என்பதால் ஆய்வாளர் தன்னையும் த.கா.குமாரையும் சாட்சியாக வைத்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்தார் என்றும், அதில் தானும் த.கா.குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த சோதனை சம்மத கடிதம் அ.த.ச.ஆ.1 என்றும் பின்பு எதிரி வீட்டில் மறைத்து வைத்திருந்த

வெள்ளை நிற சாக்கு பையை எடுத்து சோதனை செய்தபோது அதில் 1.800 கிலோ கஞ்சா இருந்தது என்றும் அதற்கு P1 என குறியீடு செய்து பின்பு 05.45 மணிக்கு கைது செய்து 5.50 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து அதில் தானும் குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.2 என்றும் பின்பு எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் குமாரும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையது தான் என்றும், முதல் கையொப்பம் அ.த.சா.ஆ.3 என்றும் பின்பு 30.08.2023-ம் தேதி 09.30 மணிக்கு வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து காவல் ஆய்வாளர் அவர்களுக்கு வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அசா2 திரு. குமார் தனது சாட்சியத்தில் கடந்த 29.08.2023-ம் தேதி காவல் பணியில் இருந்தபோது 21.30 மணிக்கு ஆய்வாளருக்கு ரகசிய தகவலாளி கொடுத்த தகவலை ராமநாதபுரம் போதைபொருள் தடுப்பு நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் எழில்சுரேஷ்சிங் மேற்படி தகவலை காவல் துணை கண்காணிப்பாளருக்கும் தகவல் தெரிவித்துவிட்டு 30.08.2023-ம் தேதி 03.30 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து ரைடுக்கு ஆய்வாளருடன் தானும், பெரியகருப்பனும் புறப்பட்டு ராமேஸ்வரம் to தனுஷ்கோடி ஒத்தப்பட்டி கடற்கரையில் பொன்னாண்டி குடிசை அருகில் 5.00 மணிக்கு போதைப்பொருள் சம்மந்தமாக கண்காணித்துக் கொண்டிருந்தபோது சரியாக 05.15 மணிக்கு ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்படி வந்த முத்துராமலிங்கம் மற்றும் பொன்னாண்டி என்று முகவரி சொன்னார் என்றும், பின்பு NIB CID Police என தங்களின் அடையாள அட்டையை காண்பித்து விட்டு தங்களை அறிமுகம் செய்துவிட்டு எதிரிகள் அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சா எனும் போதைப் பொருளை வைத்திருப்பதாக

தகவல் உள்ளது என்றும், ஆகவே எதிரிகளை சோதனை செய்ய நீதிமன்ற நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற பொது அதிகாரி முன்னிலையில் சோதனை செய்யலாம் என அவருக்கு உள்ள உரிமையை எடுத்துக் கூறினோம் என்றும் அதற்கு அவர் வேண்டாம் தாங்களே தன்னை சோதனை செய்யலாம் என்று கூறினார் என்றும், அதன்படி அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் என்பதால் ஆய்வாளர் தன்னையும் த.கா.பெரியகருப்பனையும் சாட்சியாக வைத்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்தார் என்றும், அதில் தானும் த.கா.பெரியகருப்பனும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த சோதனை சம்மத கடிதம் அ.த.சா.ஆ.1 என்றும் பின்பு எதிரி வீட்டில் மறைத்து வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை எடுத்து சோதனை செய்தபோது அதில் 1.800 கிலோ கஞ்சா இருந்தது என்றும் அதற்கு P1 என குறியீடு செய்து பின்பு 05.45 மணிக்கு கைது செய்து 5.50 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து அதில் தானும் பெரியகருப்பனும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.2 என்றும் பின்பு எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தானும் பெரியகருப்பனும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், 2–வது கையொப்பம் அ.த.சா.ஆ.4 என்றும் பின்பு 30.08.2023–ம் தேதி 09.30 மணிக்கு வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து காவல் ஆய்வாளர் அவர்களுக்கு வழக்கு பதிவு செய்ய உறுதுணையாக இருந்தோம் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அசா3 எழில்சுரேஷ்சிங் தனது சாட்சியத்தில் கடந்த 29.08.2023ம் தேதி 21.30 மணிக்கு தனது தகவலாளி தன்னை தொடர்பு கொண்டு ராமேஸ்வரம் to தனுஸ்கோடி செல்லும் வழியிலுள்ள ஒத்தப்பட்டி கடற்கரையில் பொன்னான்டி என்பவரது குடிசையின் அருகில் வைத்து அவரும் முத்துராமலிங்கம் என்பவரும் கஞ்சா விற்பனை செய்து

வருவதாகவும் காலை 05.00 மணி முதல் 06.00 மணிக்குள் வந்தால் அவர்களை கஞ்சாவுடன் பிடித்துக் கொள்ளலாம் என்று கூறிய தகவலை நிலைய பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்தும் அவர்கள் உத்தரவின் பேரில் 30.08.2023-ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு பெரியகருப்பன், தலைமை காவலர் குமார் என்பவருடன் தேவையான உபகரணங்கள் எடுத்துக் கொண்டு காவல் ஆய்வாளர் வாகனத்தில் புறப்பட்டு சென்று 05.00 மணிக்கு தகவலாளியுடன் தகவலாளி சொன்ன இடத்துக்கு சென்று சேர்ந்தோம் என்றும், மறைந்து இருந்து கண்காணித்து கொண்டிருந்த போது அங்கு வந்த 2 நபர்களை அடையாளம் காண்பித்துவிட்டு தகவலாளி சென்று விட்டார் என்றும், மேற்கண்ட நபர்களை பிடித்து விசாரித்தபோது தகவலாளி கூறியபடி பேர் விலாசம் சரியாக இருந்தது என்றும் அதிகாலை வேளை என்பதால் தனிநபரின் சாட்சிகள் யாரும் வராத காரணத்தினால் தன்னுடன் அழைத்து சென்ற SSI பெரிய கருப்பன், தலைமை காவலர் குமார் என்பவரை சாட்சிகளாக கொண்டு மேற்கண்ட நபர்களிடம் நீவிர் கஞ்சா விற்று வருவதாக தகவல் கிடைத்துள்ளது என்றும், உம்மை சோதனை செய்ய அரசு பதிவு பெற்ற அதிகாரியின் முன்போ அல்லது நீதித்துறை நடுவர் முன்போ அழைத்து சென்று சோதனை செய்யும்படி கூற உமக்கு உரிமை உண்டு, அவர்களிடம் விருப்பத்தை கேட்டபோது போலீஸ் அதிகாரியாகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறியதை பதிவு செய்து அவர்களிடம் கையெழுத்து பெற்று சோதனை செய்தபோது எதிரிகளின் கையில் கஞ்சா இருந்து என்றும் அவர்கள் கையில் வெள்ளை நிற சாக்குப்பையில் இருந்த கஞ்சாவை எடைபோட்டு பார்த்தபோது 1.800 கிகி இருந்தது என்றும், அதை

அத்தாட்சியில் கைப்பற்றினோம் என்றும் இதை குறித்து அவர்களிடம் விசாரித்தபோது தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதை சாட்சிகள் SSI பெரியகருப்பன், தலைமை காவலர் குமார் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும் மேற்படி நபர்களையும் கஞ்சாவையும் நிலையம் கொண்டு வந்து காவல் நிலைய குற்ற எண்.8/23 சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)B NDPS Act வழக்கு பதிவு செய்தேன் என்றும் தான் பதிவு செய்த தகவல் அ.த.ச.ஆ,5 என்றும் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6 என்றும் எதிரிகள் கொடுத்த கைது அறிவிப்புகள் அ.த.சா.ஆ.7, 8 என்றும் ஆய்வு நமுனாக்கள் அ.த.சா.ஆ.9, 10 என்றும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் பின்னர் தக்கவழி காவலுடன் நீதிமன்றம் காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை படிவம் 95–ன் படி நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன் என்றும் அது அ.த.சா.ஆ.11 என்றும், கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களை நீதித்துறை நடுவர் அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்ட சொத்து விவர பட்டியல் Annexure–I அ.த.சா.ஆ.12 மற்றும் Annexure–II அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்படங்கள் 2 அ.த.சா.ஆ.14 என்றும், கைப்பற்றப்பட்ட மாதிரிகளை இந்நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற உத்தரவின்படி ராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து பகுப்பாய்வு அறிக்கை பெற்று சாட்சிகள் பெண் தலைமை காவலர் தீபா, பெரியகருப்பன், குமார் பகுப்பாய்வினர் வெங்கடேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அந்த பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.15 என்றும் குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)B NDPS Act குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன் என்றும், கைப்பற்றப்பட்ட கஞ்சாவிலிருந்து தலா 50 கிராம் வீதம் பகுப்பாய்விற்காக எடுக்கப்பட்ட மாதிரிகள் சா.பொ.1 மற்றும் சா.பொ2

ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மீதமுள்ள கஞ்சா சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து வினாக்களாக தொகுத்து குவிமுச 313 (1)(b) பிரிவின் கீழ் வினவ, எதிரி அவற்றை "பொய் வழக்கு" என்று கூறினார். எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் இல்லையென முடிக்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்னை யாதெனில், எதிரி மீது பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9/01– ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை அரசு தரப்பில் எந்தவிதமான தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி மெய்ப்பித்துள்ளதா? என்பது பரிசீலிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

8. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

9. அரசு தரப்பு குற்றத்துறை சிறப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில், எதிரி மீதான u/s 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 ன் படி குற்றச்சாட்டு அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின்வழி தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென வாதிட்டுள்ளது இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசிலிக்கப்பட்டது.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரைப்பில், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும் NDPS சட்ட வழிவகைகள் முறையாக பின்பற்றப்படாமலும் எதிரி மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், ஆகவே எதிரியை வழக்கிடை குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டுள்ளது மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

11. வழக்கு ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில் அசா1 ஆக தலைமை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பெரியகருப்பன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1 மூலமாக அசாஆ 1 முதல் 3 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா2 ஆக தலைமை காவலர் குமார் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக அசாஆ 4 குறியீடு செய்யப்பட்டுள்ளன. அசா3 ஆக காவல் ஆய்வாளர் திரு. எழில் சுரேஷ்சிங் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார், அவர் மூலமாக அசாஆ 5 முதல் அசாஆ 15 மற்றும் சா.பொ.1 முதல் 3 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. அரசு தரப்பில் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள சிறப்பு உதவி ஆய்வாளர் பெரியகருப்பன் என்பவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில் 29.08.2023–ம் தேதியன்று 21.30 மணியளவில் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் 30.08.2023 –ம் தேதி அதிகாலை 3.30 மணிக்கு புறப்பட்டு இராமநாதபுரம் to தனுஷ்கோடி ஒத்தப்பட்டி கடற்கரையில் பொன்னாண்டி குடிசை அருகில் கண்காணித்தபோது அதிகாலை 5.15 மணிக்கு தகவலாளி முத்துராமலிங்கம் மற்றும் பொன்னான்டியை அடையாளம் காண்பிக்க காவல் ஆய்வாளர்

பிடித்தும், அவர்களிடம் அவர்களை சோதனை செய்ய நீதித்துறை நடுவர் அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்யலாமா என கேட்டதற்கு எதிரிகளின் ஒப்புதலின் பேரில் சோதைனை செய்ததாகவும், அதற்கான சோதனை சம்மத கடிதம் அசாஆ 1 என்றும் முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் NDPS சட்டப்பிரிவு 50ன் விதிமுறையை அசா3 முறையாக பின்பற்றியுள்ளது தெளிவாக தெரியவருகிறது.

13. மேலும், அசா1 தன்னுடைய சாட்சியத்தில் 1வது எதிரியிடமிருந்து 1.800 கிகி கஞ்சாவை கைப்பற்றியதாகவும் , அவரை 5.45 மணிக்கு கைது செய்தும் , 5.50 மணிக்கு அத்தாட்சி தயார் செய்தும், 1.800 கிகி கஞ்சாவை அசாஆ 2 அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், முன் வைத்துள்ள சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் 1,2 எதிரிகளுக்கு அசா3 காவல் ஆய்வாளர் ஒரே சோதனை சம்மத கடிதம் கொடுத்துள்ளது தெரியவருகிறது.

14. மேலும், அசா2 ஆக இவ்வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ள தலைமை காவலர் குமார் தன்னுடைய சாட்சியத்தில் நடந்த சோதனை குறித்தும், எதிரிகளை பிடித்தும், சோதனை செய்தும், எதிரிகள் விற்பனைக்கு வைத்திருந்த 1.800 கிகி கஞ்சாவை காவல் ஆய்வாளர் எழில்சுரேஷ்சிங் தலைமையில் கைப்பற்றியும் சட்ட நடவடிக்கை அசா3 ஆல் மேற்கொண்டுள்ளது குறித்து அசா1–ன் சாட்சியத்திற்கு ஒத்துரைப்பாக அசா2 எதிரிகளை குற்றப்படுத்தி குறிப்பிட்டு சாட்சியம் முன்வைத்துள்ளது தெரியவருகிறது.

15. மேலும் அசா3 ஆக இவ்வழக்கில் திரு.எழில்சுரேஸ்சிங் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் Raiding and Seizing Officer ஆவார். அவரின் சாட்சியத்தினை மிக கவனமாக பரிசீலிக்கையில் 29.08.2023–ம் தேதியன்று இரவு 21.30 மணிக்கு தான் NIB CID Ramnad காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது தனக்கு கிடைத்த தகவலின்பேரில் கிடைத்த தகவலை தனது உயர் அதிகாரிக்கு தெரிவித்தும், அனுமதி பெற்றும் சார்பு ஆய்வாளர், சிறப்பு சார்பு ஆய்வாளர் தலைமையில் தலைமைக் காவலர் குமார் , பெரியகருப்பன் ஆகியோர்களுடன் இராமநாதபுரம் to தனுஷ்கோடி ஒத்தப்பட்டி கடற்கரையில் பொன்னான்டி குடிசை அருகில் கண்காணித்தபோது அதிகாலை 5.30 மணிக்கு எதிரிகளை தகவலாளி அடையாளம் காட்டியதாகவும் , இவ்வழக்கின் எதிரிகளை பிடித்தும், சோதனை செய்ய எதிரிகளுக்குள்ள உரிமைகளை எடுத்துக்கூறியும் அவர்கள் தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதால் சோதனை சம்மத கடிதம் தயார் செய்தும், சோதனை செய்தும், அதில் மொத்தம் 1.800 கிகி கஞ்சாவை எதிரிகள் வெள்ளைநிற சாக்கு பையில் வைத்திருந்ததை கைப்பற்றியும் எதிரிகளுக்கு கைது நமூனா கொடுத்தும், கைப்பற்றிய கஞ்சாவிலிருந்து மாதிரிக்கென பகுப்பாய்வுக்கு எடுத்தும் பின்னிட்டு 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், பின்னர் எதிரிகளையும் தடய சொத்தையும் காவல் நிலையம் கொண்டு வந்தும் NIB CID ramnad காவல் நிலைய குற்ற எண்.08/2023 ச/பி 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், வழக்கு கோப்பினை பரிசீலித்தும், சாட்சிகளை விசாரித்தும் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் முன்

வைத்துள்ளது குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசாஆ1 சோதனை சம்மத கடிதத்தின் பிரகாரம் NDPS சட்டப்பிரிவு 50 விதிமுறைகளுக்கு உட்பட்டு காவல் ஆய்வாளர் எதிரிகளிடம் சோதனை மேற்கொண்டுள்ளது தெரியவருகிறது.

16. மேலும், இவ்வழக்கில் தடய சொத்தினை படிவம் எண்.95–ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ள அசா3 காவல் ஆய்வாளர் எழில்சுரேஷ்சிங்கின் சாட்சியம் மற்றும் அதற்கு ஒத்துரைப்பாக அசா1–ன் சாட்சியமும் , அசா2ன் சாட்சியமும் ஒன்றாக ஒருசேர கோர்வையாக உள்ளது. ஆகவே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள காவல் ஆய்வாளர் அசா3 எழில்சுரேஷ்சிங்கின் சாட்சியத்தினையும், அசாஆ15 பகுப்பாய்வு அறிக்கையையும் மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா3 இவ்வழக்கின் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய 1.800 கிகி தாவர பொருள் கஞ்சா என்பது அரசு தரப்பில் அறிவியல் பூர்வமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

17. 2வது எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதுரைப்பில் தடய சொத்தின் மாதிரி நீதித்துறை நடுவர் முன்புக்கு NDPS சட்டப்பிரிவு 52(A) –ன் பிரகாரம் மாதிரி எடுத்திருக்காதது அரசு தரப்பு வழக்கினை பாதிக்கக்கூடிய ஒன்றாக உள்ளதாக முன் வைத்துள்ள வாதுரைப்பு குறித்து மிக கவனமாக பரிசீலிக்கையில் அசா3 திரு. எழில்சுரேரஷ்சிங் காவல் ஆய்வாளர் தன்னுடைய சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரிகளிடமிருந்து அசாஆ1 சோதனை சம்மத கடிதம் கொடுத்தும் , சோதனை செய்தும், எதிரிகளிடமிருந்து சா.பொ.1 முதல் 3–ல்

கண்ட கஞ்சாவை கைப்பற்றியுள்ளதால் அது வகைக்கு எதிரிகளிடமிருந்து கையும் மெய்யுமாக கஞ்சா அசா3 ஆல் கைப்பற்றப்பட்டுள்ளது அசா1 முதல் அசா3 –ன் சாட்சியத்தின் பிரகாரம் ஒன்றாக ஒருசேர ஒத்துரைக்கப்பட்டும் இயற்கையாகவும், கோர்வையாகவும் சாட்சியம் முன் வைக்கப்பட்டுள்ளதால் 2 வது எதிரி சம்பவ சமயம், சம்பவ இடத்தில் கஞ்சாவை விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆகவே நீதித்துறை நடுவர் முன்புக்கு மாதிரி அசாஆ 12 Annexure – I, அசாஆ 13 Annexure – II எடுக்கப்பட்டு உள்ளதால் நடந்த சம்பவம் உண்மை அல்ல என கருத இயலாது. ஆகவே, 2 வது எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதுரைப்பு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் ஏற்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை என இந்நீதிமன்றம் தாழ்மையுடன் கருதுகிறது.

18. மேலும் அரசு தரப்பில் முன் வைத்துள்ள சாட்சியத்தின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் NDPS சட்டப்பிரிவு 54–ன் பிரகாரம் 2 வது எதிரி , சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் 1.800 கிகி கஞ்சாவை 1 வது எதிரியுடன் சேர்ந்து விற்பனைக்கு வைத்திருந்துள்ளது அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியம் மற்றும் ஆதாரங்களின் வழி எளிதில் அனுமானிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது அந்த அனுமானத்தினை மறுத்து உரைக்கும் விதமாக இவ்வழக்கில் 2 வது எதிரி தரப்பில் NDPS சட்டப்பிரிவு 54 ன் பிரகாரம் எவ்வித சாட்சியமும் சான்றாவணமும் 2 வது எதிரியால் முன்னிடப் பட்டிருக்கவில்லை.

19. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில், 2 வது எதிரி மீதான NDPS சட்டப்பிரிவு 8(c)r/w 20(b)(ii)(B) of NDPS Act 1985 –ன் கீழான குற்றச்சாத்து அரசு தரப்பில் அசா1 முதல் அசா3 சாட்சிகளின் சாட்சியம்

மற்றும் அசாஆ1 முதல் அசாஆ15 வரையிலான சான்றவாணங்களின் பிரகாரமும் சா.பொ.1 முதல் சா.பொ.3 ன் பிரகாரமும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

20. ஆகையால், மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் இவ்வழக்கின் 2வது எதிரி NDPS சட்டப்பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. ஆகவே 2வது எதிரி சட்டப்பிரிவு 8(c) r/w 20(b) (ii)(B) of NDPS Act 1985–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என்று முடிவு செய்து, 2வது எதிரிக்கு வழங்க வேண்டிய தண்டனை குறித்து 2வது எதிரியிடம் வினவ, 2வது எதிரி கீழ்கண்டவாறு கூறினார்.

| |
|---|
| எனது வயது 61 ஆகும். என்னை மன்னிக்க வேண்டும். |

ஆகவே, 2வது எதிரியின் பதிலை கருத்திற்கொண்டும், வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் இந்த வழக்கானது 2024–ம் வருடத்திலிருந்து விசாரணைக்காக இருந்து வருகின்றது என்பதாலும் , 2வது எதிரி தவறாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு விசாரணைக்கு வருகை புரிந்துள்ளார் என்பதாலும் 2வது எதிரியின் கோரிக்கையினை ஏற்றும், 2வது எதிரிக்கு இவ்வழக்கில் குறைந்தபட்ச தண்டனை வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் நியாய தர்ம அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

22. முடிவாக 2 வது எதிரி 1985–ம் வருடத்திய போதை மருந்துகள் மற்றும் மனநிலை பாதிக்கும் பொருட்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டம் 9–01 ச–பி 8(c) r/w 20(b) (ii)(B)of NDPS Act 1985 –ன் படி குற்றவாளி என முடிவு செய்யப்பட்டும் 2 வது எதிரிக்கு 25 நாட்கள் கடுங்காவல் சிறைத் தண்டனையும் அபராதம் ரூ. 10,000/– விதித்தும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் ஒரு வாரம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், 2 வது எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து வந்த காலத்தை குவிமுச பிரிவு 428 ன் படி கழித்துக்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

2 வது எதிரி 30.08.2023 முதல் 27.09.2023 வரை சிறையில் இருந்துவந்துள்ளார் .

2 வது எதிரிக்கு இவ்வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தொகை ரூ.10,000/–ஆகும்.

23. இவ்வழக்கில் ஆர்பிஎண்.281/2023–ல் சா.பொ.1 ,2 மாதிரி கஞ்சா மற்றும் சா.பொ.3 மீதமுள்ள கஞ்சாவை பொறுத்து இவ்வழக்கில் மேல் முறையீடு காலம் முடிந்த பிறகோ அல்லது மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டால் மேல் முறையீடு முடிந்த பிறகோ பின்னர் உரிய சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு Drugs Disposal Committee மூலம் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால், சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் விரிவாக்கம் செய்யப்பட்டும் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மே மாதம் 29–ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T PANNEERSELVAM Digitally signed by T PANNEERSELVAM Date: 2026.05.29 17:20:20 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

**சாட்சி பட்டியல்–**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

அ.சா.1 திரு. பெரியகருப்பன், சிறப்பு சார்பு ஆய்வாளர்.

அ.சா.2 திரு. குமார், தலைமை காவலர்.

அ.சா.3 திரு. எழில்சுரேஷ்சிங், காவல் ஆய்வாளர்.

**அரசு தரப்பு சான்றாவணங்கள்–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | சோதனை சம்மத கடிதம் |
| அ.சா.ஆ.2 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.3 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சியின் முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சியின் இரண்டாவது கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | தகவல் |
| அ.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.7 | கைது அறிவிப்பு |
| அ.சா.ஆ.8 | கைது அறிவிப்பு |
| அ.சா.ஆ.9 | ஆய்வு நமூனா |
| அ.சா.ஆ.10 | ஆய்வு நமூனா |
| அ.சா.ஆ.11 | படிவம் 95 |
| அ.சா.ஆ.12 | Annexure–I |
| அ.சா.ஆ.13 | Annexure–II |

| | |
|---|---|
| அ.சா.ஆ.14 | புகைப்படங்கள் –2 |
| அ.சா.ஆ.15 | பகுப்பாய்வு அறிக்கை. |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u> –**

சா.பொ.1 மாதிரி கஞ்சா

சா.பொ.2 மாதிரி கஞ்சா

சா.பொ.3 மீதமுள்ள கஞ்சா

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருள்</u>**–இல்லை.

T PANNEERSELVAM

Digitally signed by T PANNEERSELVAM
Date: 2026.05.29 17:20:29 +0530

தலைமை ஏற்பவர் மற்றும் கூடுதல் மாவட்ட மற்றும்

அமர்வு நீதிபதி, புதுக்கோட்டை.

பின்குறிப்பு

1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் உள்ளார்.
2. சாட்சிகள் யாரும் விசாரணையில் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. எதிரிக்கு தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்பட்டது.

Fair/Draft
Judgment in C.C.205/2024
Dt. 29.05.2026.